4369/1

தமிழ் வாழ்க!

துணர் ௩௫. மலர் ௮.

தமிழ்ப் பொழில்

2 - DEC 1959

விகாரி - கார்த்திகை

1959

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர்:

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

தமிழ்ப் பொழில்.

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம், B. A., B. L., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்; பொழிற்றொண்டர்.

2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.

3. பேராசிரியர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,

4. சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

5. வித்துவான், க. வெள்ளைவாரணனார்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

6. திரு. சி. வேதாசலம், B. A., B. L.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

7. திரு. வித்துவான் ச. பாலசுந்தரம்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

உள்ளுறை

துணர் கரு — மலர் அ

		பக்கம்
1.	கரந்தைத் தமிழ்ச் சங்க நாற்பத்தெட்டாம் யாண்டு நிறைவு விழா	225
2.	விழாத் தலைவர் வரவேற்பு வாழ்த்துரை	233
3.	பழந்தமிழர் காட்சித்திறன் — K. S. மகாதேவன் M. A., B. Sc.,	237
4.	பழந் தமிழ் நாட்டில் கலை வளர்ச்சி — சாமி. சிதம்பரனுர்	249

2 - DEC 959



கரந்தைத் தமிழ்ச் சங்க ஆயுள் உறுப்பினரும்,
தமிழ்ப் பேரன்பரும், புரவலருமான,
திரு. தெ. துரைராசுப் பிள்ளையவர்கள் எம். எல். சி.,
திருச்சிராப்பள்ளி.



கரந்தைத் தமிழ்ச் சங்க 48-ஆம் ஆண்டு விழாத் தலைவர்

திரு. தி. மூ. நாராயணசாமி பிள்ளையவர்கள் எம். ஏ., பி. எல்.,

துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

2 - DEC 1959

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௰	மலர்
௩௫	விகாரி, கார்த்திகை 1959 நவம்பர், டிசம்பர்.	அ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.
நாற்பத்தெட்டாம் ஆண்டு நிறைவு விழா.

கரந்தைத் தமிழ்ச் சங்க நாற்பத்தெட்டாம் யாண்டு நிறைவுவிழா திருவள்ளுவர் ஆண்டு 1990 புரட்டாசித் திங்கள் 25-ஆம் நாள் 11—10—59 ஞாயிற்றுக்கிழமை கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெரு மன்றத்தில் சீரும் சிறப்பும் பொருந்தக் கொண்டாடப் பெற்றது. அண்ணமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. தி.மூ. நாராயண சாமி பிள்ளையவர்கள் M.A., B.L., தலைமை தாங்கினர்கள். சங்கத்தின் தமிழ்ப்பெரு மன்றிலும் வெளியிலும் பந்தரிட்டுப் புதுமணல் பரப்பி யிருந்தனர். காய்க்குலைக் கமுகும் வாழையும் வல்லியும் ஆயவை ஆங்காங்கு கண்ணுக்கினிய காட்சி நல்க நாட்டப்பெற்றிருந்தன. பள்ளி ஆசிரியர்களின் கைவண்ணங்காட்டும் வண்ணத்தாள்களின் பூவும் கொடியும் பொலிந்து தோன்றின. விழாத் தலைவரையும் சொற்பொழிவாளரையும் விழாவினைக் கண்டும் கேட்டும் மகிழ ஈண்டும் மக்களையும் வரவேற்கும் பொருளுரை பொதிந்த வளைவுகள் சங்கமுன்றிலிலிருந்து வாயில்வரை அழகுசெய்து விளங்கின.

காலை முதலே சங்க அன்பர்களும் மாணவர்களும் அகமும் முகமும் மலர நிகழ்ச்சிகளைக் காணும் பேரார்வமுடன் கூடிவிட்டனர். ஆண்டுவிழாத் தலைவரும் சங்கத் தலைவரும் புலவர் கல்லூரி மாணவர் விடுதியில் மாணவர் புடைசூழ வீற்றிருந்தனர். அங்கிருந்து பல்லியங்கள் முழங்கவும் சங்கக் கல்வி நிலைய மாணவர்களின் சங்கத்தின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்களை விண்ணதிரப் பாடவும் ஊர்வலமாகச் சங்கத்திற்கு அழைத்துவரப்பெற்றனர். சைகோனில் வாழும் தமிழன்பர்களின் பொருளுதவி கொண்டும் அரசியலார் நன்கொடை கொண்டும் கட்டப்பெற்றுள்ள உமாமகேசுவர உயர் நிலைப்பள்ளியையும் நத்தம்போற்கேடும் உளதாகும் சாக்காடும் வித்த கர்க்குத்தான் எய்தமுடியுமெனத் திருவள்ளுவர் கூறியது போலப் பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் மறையாது விளங்கும் தமிழவேள்

செந்தமிழ்ப் புரவலர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களின் திருவுருவப் படத்தையும் திறந்தருளினர். விழாத் தலைவரும் விழாவைக் காணக் குழுமியிருந்த மக்களும் சங்கத் தமிழ்ப் பெருமன்றிற்குப் போந்தருளினர். கடவுள் வணக்கத்துடன் விழா நிகழ்ச்சி தொடங்குவதாயிற்று. சங்கத் தலைவர் திரு. ச. சுயம்பிரகாசம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். விழாத் தலைவருக்கு நம் சங்கத்தோடும், இதனை நிறுவிப்புரந்த தமிழவேளவர்களுடனும் இருந்த தொடர்பும் ஈடுபாடும் மிகப்பெரிதெனச் சுட்டிக்காட்டினர். பின்னர்ச் சங்க வரவேற்பு வாழ்த்துப்பா விழாத் தலைவருக்குப் படித்து வழங்கப்பெற்றது. (அதனைப் பிறிதோர் இடத்திற்காண்க.)

விழாத் தலைவர் திரு. தி. மூ. நா. பிள்ளையவர்கள் தமிழ்மொழி வளர்ச்சி குறித்தும் சங்கச் செயல்முறைகள் பற்றியும் அரியதோர் முன்னுரையாற்றினர்கள். அதன் சுருக்கம் பின்வருமாறு:—

திருவாளர் இராதாகிருட்டினப் பிள்ளை, டாக்டர் சுவாமிநாத ஐயர், திரு. மறைமலையடிகள், திரு. விபுலானந்த அடிகள், திரு. சோமசுந்தர பாரதியார் இன்னோரன்ன பெரியார்கள், பேராசிரியர்கள் இச்சங்க ஆண்டுவிழாக்களில் தலைமை தாங்கி உள்ளார்கள். சென்ற இரண்டாண்டுகளில் டாக்டர் சேதுப்பிள்ளை அவர்களும் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும் தலைமையேற்றுள்ளார்கள். இவர்களுடைய வரிசையில் என்னையும் தலைமையேற்கும்படிச் செய்ததை நினைக்கும்போது நான் எவ்வளவு அதற்குத் தகுதியில்லாதவன், சிறியவன் என்றெண்ணி வருந்தினாலும் உங்களுடைய பேரன்பை நினைத்து நன்றி செலுத்துகின்றேன்.

செயின்டு சூசையப்பர் கல்லூரியை நடத்தும் ஜெசுட்டு சங்கத்தை நிறுவியவர் செயின்டு இக்னேஷியஸ் லோயலா என்பவர். மனிதர்கள் ஒழுங்காக வளர்ந்து முன்னேறவேண்டுமெனில் தம்மிடத்தில் அவர்களை ஐந்து வயது சிறுவர்களாயிருக்கும்போதே ஒப்படைத்துவிட்டாற் போதுமென்றும் பிறகு கவலையே இராது என்றும் அவர் கூறியுள்ளார். நாடு வளரவேண்டுமானால் சிறு வயதிலேயே மக்களின் உள்ளத்தை நல்லவழிகளில் திருப்பி, நல்ல சிந்தனைகளை எழுப்பி, அவர்கள் வாழ்வில் ஒளி வீசும்படிச் செய்தல் வேண்டும். எல்லாவற்றையும்விட, ஒரு கடவுள் உண்டு என்ற உணர்ச்சி இளம்பருவத்திலேயே ஊட்டப்பெறல் வேண்டும். இதையெல்லாம் எண்ணித்தான் பெரியார்கள் இத்தகைய சங்கத்தை ஏற்படுத்தித் தமிழ் உலகத்திற்கே ஒரு வழிகாட்டியாக விளங்கும்படி இதை வளர்த்துள்ளார்கள். இதைவிடப் பெரும்பணி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஏதோ பதவியிலிருக்கலாம், ஏதோ கற்றுச் சிலதுறைகளிலே பொதுமக்களின் மதிப்பைப் பெறலாம். உண்மையாகத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பாடுபடவேண்டுமானால் இத்தகைய சங்கத்தையும், கல்லூரிகளையும் மாணவர் இல்லங்களையும் ஏற்படுத்தி நன்முக நடத்திவர வேண்டும்.

தமிழ் மொழியானது உலகம் மதிக்கக்கூடியதான, மேன்மையான மொழி. மற்ற மொழிகளுடன் ஒப்பிடும்போது இதற்குத் தனியானதொரு உயர்வு, தனியானதொரு பண்பு காணப்படுகிறது. தமிழ் இலக்கியங்கள் மக்களுடைய எண்ணங்களையெல்லாம் எடுத்து வழங்குவதுடன் அவர்கள் வாழ்வும் வரலாறும் எத்தகைய உயர்ந்த அடிப்படையில் அமைந்திருந்தன என்பதையும் காட்டுகின்றன. தமிழ்மொழி மிகப் பழையமொழி. இந்த மொழியிலிருந்து மற்றசில மொழிகளும் பிறந்திருக்கின்றன. ஆனால் பிற்காலத்தில் பல காரணங்களினால் இம்மொழியின் வளர்ச்சி தடைப்பட்டது. தாய் மொழியில் அன்பும் அக்கறையும் குறைந்துபோயின. அதனுயர்வை மக்கள் உணரவில்லை. அவரவர்களுக்கு, அவரவர் மொழிகளில் பற்றும் அக்கறையுமிருக்க வேண்டுமல்லவா?—அவை இல்லாது போயின. வேறுமொழிகளின் ஆதிக்கத்தினாலும், அரசியற் சூழ்நிலைகளினாலும் நம்முடைய தாய்மொழியின் பெருமை நமக்குத் தெரியாது போயிற்று. பாரதியார் பாடியிருப்பதுபோலச் "செவிடர்களாய், ஊமையராய், குருடர்களாய்" நாம் இருந்தோம்; இருக்கின்றோம் என்றுகூடச் சொல்லலாம். நாம் 'சேமமுற வேண்டுமெனில்' 'தேசமெலாம் தமிழ் முழக்கம் செய்யவேண்டும்'. தமிழர் எல்லோரும் ஆங்கிலம் கற்பதென்பது முடியாத காரியம். ஆங்கிலம் கற்று எவ்வளவு உயர்வாக வாழ்ந்தாலும், நமது தாய்மொழியைக் கற்றுப் பயில்வதால் மனதிலேற்படுகின்ற உண்மையான மகிழ்ச்சி ஏற்படாது.

அரசியற்றுறையில், நம் நாடு முன்னேறுவதற்குக்கூடத் தமிழ்மொழியை அதற்குத் தக்கபடி உயர்த்தியாக வேண்டும். மக்களுடைய மனத்தை நல்லவழிகளில் செலுத்த இதுவே சிறந்த கருவியாகும். தாய்மொழியின் ஆக்கமின்றித், துணையின்றி, நாம் விடுதலைபெற்றுங்கூட வாழ்க்கையில் உயரவியலாது. இன்றைய மக்களாட்சிக் காலத்தில், தமிழரின் தரம் உயரவேண்டுமாயின், கட்டாயம் தாய்மொழியாகிய தமிழ்மொழி ஆக்கம்பெற வேண்டும் என்பதில் ஐயமில்லை. சில மக்கள் மட்டும் ஆங்கிலம்பேசி, ஆங்கிலத்திலேயே பழகி வருவதினால் நம் மக்களின் தரம் உயர்ந்துவிடாது. அறிவிலும், ஆற்றலிலும், செயலிலும் மக்கள் உயர்வதற்குச் சிறந்த கருவி தாய்மொழி ஒன்றேயாம். ஆனால் தாய்மொழியை உயர்த்துவதற்கு, ஆங்கிலம் உதவிபண்ணலாம். நமதுமொழி சிறந்தது. நல்ல இலக்கியத்தைக் கொண்டது என்றெல்லாம் இறுமாப்புக் கொண்டு, நமக்குள் மறைவாகப் பழங்கதைகளைப் பேசிக்கொண்டிருத்தலாகாது. உலகில் மனிதன் விநாடிதொறும் மாறிக்கொண்டேயிருக்கிறான். பழக்க வழக்கங்களும் மாறிக்கொண்டே வருகின்றன. இக்காலத்திற்கேற்றவாறு புறஉலகில் பல புதிய சாதனங்களை நாம் ஏற்றுக்கொண்டுவிட்டோம். எனவே நாம் தமிழ் மொழியின் பழைய இலக்கியங்களை மட்டும் பயில்வது போதுமா? நம்முடைய மொழி ஆக்கம்பெறவேண்டும் வழிகள்பற்றிப் பாரதியார் 'தமிழ்த்தாய்' என்ற ஒரு பாட்டில் நிரம்ப அழகாகப் பாடியிருக்

கின்றார். ஒரு காலத்திலே நாம் பெரிய இலக்கியங்களை இயற்றியும், கற்றும் சிறப்பாக வாழ்ந்தோம். இப்பொழுது அவ்விலக்கியங்களைப் புறக்கணிக்காது, பழம்பண்புகளை மனத்திற்கொண்டு அவைகளின்படி நடக்கவேண்டியது அவசியமென்றாலும், மற்ற மொழிகளில் அறிவுத் துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் நம்முடைய மொழியிலும் ஏற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். மற்றைய நாட்டுக் கலைகளையெல்லாம் கற்கவேண்டும். தமிழைக் கைவிடாமல் ஆங்கிலத்தையும் நன்றாகப் படித்து அதிலுள்ள பொருள்களையும் உணரவேண்டும். அத்துடன் நம் மொழியிலுள்ள கலைப்பொருட்களை மற்ற நாடுகள் அறியும்படியும் செய்யவேண்டும். ஆகவே இத்தமிழ்ச் சங்கத்திற்கு முன்னைவிட இப்போது பொறுப்பு அதிகமாயிருக்கிறது. இச்சங்கம் 1911-ல் தோன்றியது. அக்காலத்தில் தமிழர்க்குத் தம்மொழியிலிருந்த ஆர்வத்தைவிட, 1959-ம் ஆண்டில் ஆர்வம் நிரம்ப மிகுதியாகக் காணப்படுகின்றது. அக்காலத்தில் ஏதோ புலவர்களுக்கு மட்டுமே, தமிழ்மொழியின் சிறப்பு நன்றாகத் தெரியும். இச்சங்கமும், மற்ற சங்கங்களும் ஐம்பதாண்டுகளாகச் செய்துவந்த தொண்டினால் மக்களுடைய உள்ளத்தில் தமிழ்ப்பற்றும், ஆர்வமும் அதிகமாகி இருக்கின்றது. அந்தக்காலத்தில் இல்லாத வாய்ப்புகள் இந்தக்காலத்தில் நமக்கு இருக்கின்றன. அவைகளை நாம் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை ஒரு 'தமிழ்ப் பல்கலைக் கழகம்' என்று சொல்லலாம். அதிலே பணியாளனாக இருக்கின்றேன். இந்தக் காரணத்தினாலேயே என்னை இங்கு, இன்று அழைத்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. வரலாற்று முறையாகப் பார்க்கும்பொழுது 1901-ல் மதுரையில் பாண்டித்துரைத் தேவர் தமிழ்ச் சங்கமொன்றை நிறுவினார்கள். 1911-ல் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றிற்று. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1929ல் நிறுவப்பெற்றது. தமிழ்க் கல்லூரிகளில் தமிழ்மொழி மட்டும் கற்பிக்கப்படுவது போதாதென்றும் பல்கலைக் கழகக் கல்லூரிகளிலும், அதற்குச் சிறப்பான இடங்கொடுப்பது இன்றியமையாததென்றும் கருதியே காலஞ்சென்ற பெருங்கொடைவள்ளல் செட்டிநாட்டரசர் சர். அண்ணாமலை செட்டியார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவினார்கள். தமிழ் இலக்கியங்கள், தமிழர் பண்பாடு, தமிழருடைய வரலாறு — இவைகளையெல்லாம் இந்நாட்டிலுள்ள தமிழர்களும், மற்ற நாடுகளிலுள்ள தமிழர்களுமன்றி, பிறநாட்டவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதும் அவர்களுடைய நோக்கமாகும். தமிழ்மொழி உலகிற்கே வள்ளுவரைத் தந்தது என்று பாரதியார் பாடியவாறு பலதமிழ்ப் பேரறிஞர்களையும் புலவர்களையும், உலகத்திற்குத் தந்து, தமிழ்நாடு புகழ்பெறச் செய்ய வேண்டுமென்பதும், அப்பெரியாரது குறிக்கோளாகும். இச்சங்கத்தின் நோக்கமும், நான் இப்பொழுது பணியாற்றிவரும் பல்கலைக் கழகத்தின் நோக்கமும், ஒன்றேயென்று சொல்லலாம்.

ஆகையால் இந்தச் சங்கம் இந்தப் பல்கலைக் கழகத்தோடு நெருங்கிய தொடர்புகொள்ள வேண்டும். சர். அண்ணாமலைச் செட்டியாரின் மகனார், அரசர். சர். முத்தையாச் செட்டியார் அவர்கள் தமது தகப்பனாரைப் போலவே, சிறந்த தமிழ்ப்பற்று உடையவர்கள். தமிழுக்குச் சிறந்த தொண்டுசெய்ய வேண்டுமென்ற ஆவல் உள்ள வர்கள். அவர்களுடைய தமிழன்பையும், ஆர்வத்தையும் இச்சங்கம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இச்சங்கத்தை வளர்த்த பெரியார்களில் தலைசிறந்தவராக நான் உமாமகேசுவரம் பிள்ளை அவர்களைக் கருதுகின்றேன். அவரை எனக்கு நன்றாகத் தெரியும். இச்சங்கத்தைப் பார்த்துவிட்டுத் திருச்சியிலும் பல ஆண்டுகளுக்கு முன், 'தமிழ் ஆராய்ச்சிச் சங்கம்' என்ற சங்கமொன்றைத் தொடங்கினோம். சில ஆண்டுகள்தான் அதை நடத்த முடிந்தது. அச்சங்கத்தில் நம் தமிழவேள் அவர்கள் 'கலிங்கத்துப் பரணி'யைப் பற்றி ஓர் சிறந்த சொற்பொழிவு ஆற்றி னார்கள். தமிழ் நாட்டிற் சிறந்தவராக, பண்புகள் நிறைந்தவராக, தொண்டே உருவாக, ஒருவர் விளங்கினார் என்றால் அவர் திரு. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களேயாவர். அவர்கள் தனக்கென்று நலம், ஊதியம், கைம்மாறு ஒன்றும் விரும்பாது தமிழ்த்தொண்டு புரிந்தவர்கள். இத்தகைய பெரியார் இத்தமிழ்ச் சங்கத்தின் தலைவராக முப்பது ஆண்டுகள் தொண்டு புரிந்தது இறைவனது திருவருள் என்று கொள்ளல் வேண்டும். அவரைப்போன்ற ஒருவர் முப்பது ஆண்டுகள் தொடர்ந்து உழைத்திராவிட்டால் இச்சங்கம் இத்துணைச் சிறப்பாக, செழிப்பாக ஓங்கி வளர்ந்திராது. அவர் இச்சங்கத் திற்காகத் தம்முடைய உடல், பொருள், ஆவி ஆகிய எல்லா வற்றையும் கொடுத்தார்கள். இங்குப் படித்த மாணவர்கள் பல்வேறு இடங்களில் ஆசிரியர்களாக அமர்ந்திருக்கின்றார்கள்; பேராசிரியர்க ளாகவும் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரும் தமிழ் மொழிக்குப் புத்துயிர் அளித்த திரு. உமாமகேசுவரம் பிள்ளையவர்களைக் குறித்துப் பேசும்போது கண்ணீர் பெருக்கி, நன்றி தெரிவித்துக் கொள்ளுகின் றார்கள். அத்தகைய பேரன்பை மக்கள் மனத்தில் ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் எல்லோருக்கும் இருக்காது. இப்பெரியாருடைய உருவப் படத்தைத் திறந்துவைக்கும்பேறு எனக்குக் கிடைத்ததற்கு நிரம்ப மகிழ்கின்றேன். அத்துடன் புதுஉயர்நிலைப்பள்ளிக் கட்டிடத்தைத் திறந்துவைத்ததிலும் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தச் சங்கத்தை வளர்த்த பெரியார்கள் எல்லோரையும் நான் குறிப்பிட இயலாவிட்டாலும் சிலருடைய பெயர்களையேனும் குறிப்பிட விரும்புகிறேன். திரு. அருளானந்தசாமி நாடாருக்கு அடியேன் நிரம்ப நண்பன். அவரைப்போன்ற உதாரகுணமுள்ள, தாராள மனமுள்ள ஒருவரை நான் பார்த்ததேயில்லை. நான் அடிக்கடி அவருடைய வீட்டிற்குப் போயிருக்கிறேன். பணத்தை மூட்டை கட்டி வைத்துக்கொண்டு அவரைப்போல் வருபவர்களுக்கெல்லாம்

கொடுக்கும் "தாதா"வை நான் பார்த்ததில்லை. கர்ணனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இவரைப் பார்த்தபின்தான் கர்ணன் இருந்திருக்கலா மென்ற நம்பிக்கைத் தோன்றுகிறது. கர்ணன்கூட இப்படி வாரிவழங்கியிருப்பானோ என்னவோ தெரியாது. அவ்வளவு அன்பு கசியும் உள்ளம் படைத்தவர். அவருக்கு முன் திரு. ஐ. குமரசாமிப் பிள்ளை அவர்களும் சங்கத்திற்கு உழைத்துவந்திருக்கிறார்கள். நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களையும் மறக்கமுடியாது. இவர் ஓய்வு பெற்றுக்கொண்டவுடனேயே சங்கத்தின் புலவர் கல்லூரியுடன் தொடர்புகொண்டார். திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்களையும் மறக்க இயலாது. இச்சங்கத்திற்கு உயிர் ஊட்டியவர்களில் இவரும் ஒருவர். இவருடைய கவிதைத் திறன் வியந்து பாராட்டற்குரியது. இச்சங்கத்தில் ஈடுபாடுடையவர்களில் திரு. L. உலகநாத பிள்ளையவர்களையும் நினைவுகூரவேண்டும். இந்தச் சங்கத்தை வளர்த்த பெரியார்கள் யாவர்க்கும் வணக்கஞ் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

அரசியல் வேறு. தமிழ்த்தொண்டு வேறு. எல்லோரும் இச்சங்கத்திற் சேரலாம். எல்லோருக்கும் இச்சங்கத் தொண்டிற் பங்குண்டு. எதிர்காலத்தில் இச்சங்கம் வளர்ந்து சிறக்கவாழும் என்பதற்கு ஐயமில்லை. அதற்கான அறிகுறிகளைக் காண்கின்றேன். புலவர் கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி, ஏழை மாணவர் இல்லம், பொது நூலகம் ஆகிய கல்வி நிலயங்களை நடத்தி வருவதுடன் புதிய கட்டிடங்களும் கட்டப்பட்டுள்ளன. தொடக்கப் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்குச் சென்னைத் திரைப்பட நிலைய உரிமையாளர், தயாரிப்பாளர் திரு. A. K. வேலன் அவர்கள் ரூ. 30,000 உதவியிருப்பதாக அறிகிறேன். இவ்வளவு பெரிய மனத்தைக் கொடுத்த இறைவன் இவருக்குப் பெருஞ்செல்வத்தையும் கொடுத்தருள்வாரென்று நம்புகிறேன். இச்சங்கத்தின் முன்னேற்றத்தில் பொதுமக்களுடைய ஆர்வத்தையும் மிகுதியாகக் காண்கிறேன். நெல்லாகவும், அரிசியாகவும், வேறு பொருள்களாகவும், சிறிய, பெரிய தொகைகளாகவும் உதவி கிடைத்து வருவது மகிழ்ச்சி தருகிறது. பல வணிகர்களும் நிலக்காரர்களும் இச்சங்கத்துக்குப் பேராதரவளித்து வருகின்றனர். அவர்கள் எல்லோருக்கும் சங்கம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. நம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் நாளும் அங்கம் தழைக்க அமைந்து வாழ்கவென உளமார வாழ்த்துகிறேன்.

விழாத்தலைவர் முன்னுரை முடிவுற்றதும் காலஞ்சென்ற சங்கத் தலைவர் முத்தமிழ் வள்ளல், ஆ. யா. அருளானந்தசாமி நாடாரவர்களின் படத்தை மேன்மைதங்கிய தஞ்சை மேற்றிராணி ஆண்டகை பேரறிஞர் திரு. R. A. சுந்தரம் D. D., M. A., L. C. L., அவர்கள் திறந்து வைத்துச் சுருக்கமும் கருத்தும் செறிந்த உரையொன்று ஆற்றினார்கள். ஆண்டகையவர்கள் நாடாரவர்களின் இம்மைச்

செய்தது மறுமைக்காம் என்று அறமியற்றும் அறவிலே வணிகர்போல ஈந்துவாழாமல், துன்பங்கண்டிரங்கி உளமுவந்து கொடுத்து மகிழ்ந்த தூயவாழ்வைப் பாராட்டினார்கள். செல்வர்க்கே செல்வந் தகைத்து என்று வள்ளுவர் பாராட்டுவதுபோல நாடாரவர்கள்பால் அமைந்த நல்லொழுக்க வாழ்வு குறிப்பிடத்தக்கதெனச் சுட்டினர். எல்லாவற்றிற்கும் மேலாகக் கடவுளிடம் என்றும் மாருத உண்மைப் பற்றுக்கொண்டவரெனக் குறிப்பிட்டனர். இத்தகைய குண நலன்கள் நம் தமிழர்கட் கமைய வேண்டுமென வாழ்த்தி முடித்தனர்.

காலஞ்சென்ற கூத்தாநல்லூர் திருவாளர் ஜ. ம. அப்துல்அசீசு சாகிப் அவர்களின் திருவுருவப்படத்தைத் தஞ்சை மாவட்ட காங்கிரசுக் குழுத் தலைவரும் நல்ல பொதுநலத் தொண்டரும் ஆய M. D. தியாகராச பிள்ளையவர்கள் திறந்துவைத்து உரையாற்றினர். தம்மைச் சேர்ந்தோரும், பிறமக்களும் பயன்துய்க்க வாழ்ந்த திரு. அசீசு அவர்களின் பெருந்தன்மையை வியந்து பாராட்டினர். இத்தகைய மனப்பான்மை தமிழர்கட்கு வேண்டுமெனக் கூறினர்.

காலஞ்சென்ற திரு. V. நாடிமுத்துப் பிள்ளையவர்களின் சட்டகரும் அவர்களின் பெரும்பண்ணையினை மேற்பார்த்துவருபவருமாய திருவாளர் T. S. சுப்பிரமணிய பிள்ளையவர்களின் படத்தையும் திரு. M. D. தியாகராச பிள்ளையவர்கள் திறந்து வைத்தனர். திரு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் திரு. நாடிமுத்துப் பிள்ளையவர்கள் உள்ளபோதும் அவருக்குத் துணையாகவிருந்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செல்வமும் புகழும் சேர உழைத்தவரென்றும் அவரிறந்தபோதும் அவருடைய பெரும்பண்ணைக்குப் பொறுப்பாளராகவிருந்து வருகிறார்களென்றும் குறிப்பிட்டனர். திரு. அசீசு அவர்களும் திரு. சுப்பிரமணிய பிள்ளையவர்களும் சைகோன் சென்றிருந்தபோதும் சங்கத்தினையும் தமிழையும் மறவாமல் ஆங்கு வாழ்ந்த தமிழ் அன்பர்களையும் தூண்டிப் பெரும் பொருள் சேர்த்து வழங்கியமை பெரிதும் போற்றற்பாலதாகுமென மொழிந்தனர்.

தமிழ்த்தவமணி திரு. புலவர் பொன்னணுக் களத்தில் வென்றாரவர்கள் உடலுக்கும் உள்ளத்திற்கும் உறுதிபயக்கும் பல வகையான யோக இருக்கைகளைச் செய்து காட்டினர். இடை இடையே அவற்றின் பயன்களையும் செய்முறைகளையும் எடுத்துக் கூறினர். முதுமைப் பருவத்தும் இளைஞர்போல நினைத்தவாறெல்லாம் உடலை இயக்கி இருக்கைகளைச் செய்வதன்மூலம் தமிழகத்துப் பண்டைய தவமுனிவர்களை நினைவுறுத்தினர். இந் நிகழ்ச்சியுடன் முற்பகல் நிகழ்ச்சிகள் இனிது நிறைவெய்தின.

ஆண்டுவிழாவிற் கலந்துகொண்ட அன்பர்கட்கு அறுசுவை உண்டி வழங்கப்பெற்றது. பிற்பகல் நிகழ்ச்சி மாலை 4 மணிக்குத் தொடங்கிற்று. "தமிழினம் வாழ" என்ற தலைப்பில் திரு.

அ.மு. பரமசிவானந்தம் M.A., M.Litt., அவர்கள் அரியதொரு விரிவுரையாற்றினர். தமிழிலக்கிய நூல்கள் கொண்டும், சமய நூற்களின் சிறந்த கருத்துக்கள் கொண்டும் தமிழினம் வாழ்ந்தால் உலக நாகரிகம் புதுப்பிக்கப்படுமெனவும், அதற்குரிய பண்புடன் வாழ உழைப்பது உலகிற்குத் தொண்டு புரிவதாகுமெனவும் கூறித் தக்க சான்றுகளோடு உரையாற்றினர்.

பின்னர், திரு. சங்குப் புலவரவர்கள் 'திருக்கோவையாரும் கல்லாடமும்' என்ற தலைப்பில் உரையாற்றினர். பண்டைய நூற்களில் நன்கு பயின்று ஊறிய புலவரவர்களின் புலமைத்திறம் பல இடங்களில் மிளிரக்கண்டு அவையோர் அகமும் முகமும் மலர்ந்தனர். அடுத்துத் "திணைப்பண்கள்" என்ற தலைப்பில் குடந்தை திரு. இசை. ப. சுந்தரேசனவர்கள் உரையாற்றினர். இவர்கள் தமிழிசைத்துறையில் மிக்க ஆராய்ச்சியுடையவர்கள். நம் சங்க வெளியீடாக வந்துள்ள திரு. விபுலாநந்த அடிகளின் 14 ஆண்டு ஆராய்ச்சியின் விளைவான "யாழ்நூலை" நன்கறிந்து விளக்க வல்லவர்கள். கருநாடக இசையிலும் வல்லவர்கள். சொற்பொழிவின் இடைஇடையே இசைத்தமிழ் நுட்பங்களை இசைத்துக்காட்டி விளக்குவது இவருக்கே உரித்தான இயல்பாகும். இச்சொற்பொழிவும் அவ்வண்ணமே அமைந்து அவையோரை மகிழ்வித்தது. இரவு உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளி மாணவர்களால் 'வல்வில் ஓரி' என்னும் நாடகம் நிகழ்த்தப்பெற்றது. இறுதியாகச் சங்கத் தலைவர் நன்றிகூறச் சங்க வாழ்த்துடன் விழா நிறைவெய்தியது.

கலைமகள் விழாச் சொற்பொழிவுகள்.

இன்று நம்முன்னுள்ள தமிழ்த் தொண்டுகளைச் சிந்தித்துச் செயல்புரிய வேண்டியவர்களாகவுள்ளோம். புதிய நடையில் இலக்கியங்கள் தோன்றவேண்டும். அப்பொழுதுதான் இலக்கியம் வளரும். அதிக நூல்கள் தோன்றும். இன்பத்தை மட்டும் வளர்க்கக் கூடியவைகளாக இன்றைக்கு அதிக நூல்கள் இயற்றுகின்றனர். அறிவை வளர்ப்பன மிகச்சில நூல்களேயாகும். பௌதீக விஞ்ஞான நூல்கள் அதிகம் வளரவேண்டும். ஆராய்ச்சி நூல்கள் பெருகவேண்டும். நகைச்சுவை நூல்கள் மல்கவேண்டும். மேற்குறித்தவாறு துறைதோறும் நூல்கள் பெருக அப்பணியில் ஈடுபட்டோரைப் பாராட்டுதல் வேண்டும். இலக்கியத்தை வளர்ப்பதோடு இசையிலும், நாடகத்திலும் தமிழர் முன்னேறவேண்டும். இவையெல்லாம் கலைத்துறையில் தமிழர் இப்பொழுதே மேற்கொள்ளவேண்டிய பணிகளாகும்.

டாக்டர், **V. செல்வராசு**, எம். பி., பி. எசு.,
தஞ்சை மாவட்ட மருத்துவத்துறைத் தலைவர்,
கலைமகள் விழாத் தலைமையுரை.
9—10—59.

தமிழ் வாழ்க.

கரந்தைத் தமிழ்ச் சங்க நாற்பத்தெட்டாம் ஆண்டு விழாவில்

தலைமை தாங்கும்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்

திருவாளர், தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை எம். ஏ., பி. எல்.,

அவர்கட்குச் சங்கத்தார் உவந்துரைத்த

வரவேற்பு வாழ்த்துரை.

---

1 நலமுறவிந் நானிலத்தார் நாவசைத்த
போதிசைத்து நயனுர் இன்பப்
புலமுறுபா வலருளத்திற் பூத்துபெரும்
நாவலர்நாப் பொலிந்து மண்மேல்
வலமுறுமூ வேந்தர்நில மாமன்னர்
தோள்வளர்ந்து மகிழ்முச் சங்கம்
இலகிநறுங் கோலோச்சி இமயமுதற்
குமரிவரை ஏற்றமுற்றே

2 தூய்மைமிகு செந்தமிழின் தொன்மையெழில்
வளமையியல் தொடர்புசான்ற
வாய்மையறம் பொருளின்ப வாழ்வுதரும்
மாட்சியெலாம் மகிழ்ந்து தேர்ந்து
தாய்மொழியால் சால்பறிவு தன்மானம்
ஆண்மையொளி தழைத்த லின்றிப்
போய்ஒருவர் புறங்கடைநின் றிரப்பதனுல்
புன்மைகள்தாம் புகுமென் றோர்ந்து

3 வாழ்வுதமிழ் நாட்டார்க்கு வண்டமிழே
என்றுணர்த்த வளமார்தஞ்சை
சூழ்கரந்தைத் தமிழ்ச்சங்கம் தோற்றியதன்
இளவலுளம் துளும்ப வந்து

ஊழ்முறைநல் லன்பருடன் ஒளிர்
'தமிழவேள்' எனநல் லுலகம்போற்ற
ஏழிசைநற் றமிழ்மகிழ எங்கள்
'உமாமகேசுரனர்' இறைமை தாங்கி

4 எழுத்தொடுசொற் கன்றிபொருட் கியல்வகுத்திங்
கெண்ணுகின்ற எண்ண மெல்லாம்
வழுத்துபெரும் வண்மையொடு வாழ்தமிழ்நேர்
விஞ்ஞான வகைகள் யாவும்
விழுத்தகையால் எடுத்தியம்பி வெல்லவல
தென்றுணர்த்த விளக்கம் மேவித்
தழைக்குமொரு திங்களிதழ் சால்புயர்த்த
நூல்நிலையம் தமிழ்க்கல் லூரி

5 இளையர்பயில் கூடமுயர் பள்ளியருங்
கவின்கலைகள் இயங்கு மன்றம்
வளமையொடு திக்கற்ற மாணவர்க்கோர்
இல்லமென வளர்க்க நாளும்
ஒளிபெருகி வளர்சங்கத் தோங்குவிழாத்
தலைமைகொள உவந்து போந்த
துளவமகிழ் மணிவண்ணன் துணைகழற்கே
அன்புசெயும் தோன்றல்! எங்கள்

6 அகமகிழ வாழ்த்துபுகன் றழைக்கின்றேம்
வருகதமிழ் அண்ணல்! வாழி!
தொகுபுகழால் தோன்றிவரும் துணைவேந்தே
வருகநலந் தூயோய்! வாழி!
தகும்பெருமை ஆன்றதமிழ் தழைத்துயர
வருகதமிழ்ச் சான்றேய்! வாழி!
மிகும்பழமைக் குடிப்பிறந்த மேன்மகனே!
வருகதமிழ் வீர! வாழி!

7 புரியுமருந் தொண்டறிந்தோர் புகழ்
நாராயணசாமி! புலனர் அன்பு
சொரியுமருஞ் செயல்புரிந்தின் சொற்பயிலும்
நாவல!பல் துறைகள் தோறும்
உரிமைதமி ழகம்பெறநல் லூக்கமொடு
பணிமுயலும் ஒப்பில் லாதோய்!
அரிதிருத்தாள் அகங்கமழப் பூண்டஅருள்
ஐய! நலம்அமைய வாழி!

8 நீங்கரிய கல்வியொடு நெறிவழங்கு
சட்டமெலாம் நிறையக் கற்றுப்
பாங்குறுநற் செல்வமுயர் பட்டம்எழிற்
பதவியெலாம் பண்பாற் பெற்றே
ஓங்குபுகழ் சிரபுரத்து மாவட்டக்
கழகத்தின் உயர்த லைமைத்
தாங்கிநலந் தழைத்தோங்கத் தொண்டாற்றி
இசைபெற்ற தக்கோய் வாழி!

9 மாட்சியுறு சிரபுரத்து நகராட்சி
மன்றத்தின் மகிழ் தலைமை
நீட்சியுறச் செயல்புரிந்தோய்! நிகழ்பாடம்
தேர்குழுவில் நிலைக்கும் நல்லோய்!
ஆட்சியுறு பணிமனைக்கிங் கலுவலரைத்
தேர்குழுவின் அண்ண லாகிக்
காட்சியுறப் பணிபுரிந்த காவலனே!
வருக! புகழ்கமழ வாழி!

10 அறநிலையக் காப்புசெயும் அருங்கழகத்
தாளுநராய் அமைந்து தேர்ந்த
முறைபுரிந்த முதல்வ! திகழ்முத்தமிழ்க்குத்
தொண்டாற்ற முயன்ற மைத்த

விறலண்ணா மலையார்பல் கலைக்கழகம்
மிளிரதுணை வேந்தாய் நின்று
நெறிகமழப் பணிபுரியும் நேயஞ்சால்
மூதறிஞ! நெடிதே வாழி!

11 பொருந்துலகப் புதுமுறையிந் நாட்டினிலே
பூத்தறிவு பொலிய வேண்டி
மருந்தெனநல் லறவுரைகள் மன்றுதொறும்
சாற்றுகின்ற மதிவல் லோய்நம்
அருந்தமிழின் புகழ்சிறக்க அமெரிக்க
நாடேகி அவர்கள் போற்றி
விருந்துசெயப் பெற்றநறும் மேலோய்!
சொல்விளைவறிந்து விரிப்போய் வாழி!

12 வாழிதமிழ் புகழ் நாராயணசாமி
வண்டமிழ்போல் வாழி வாழி!
ஊழிபல ஊழியுடல் உரம்பெறநின்
றொளிர்செல்வம் ஓங்க வாழி!
வாழிதமிழ் நாவலர்சீர் வான்புலவர்
பாவலர்கள் வளர்க்கும் சங்கம்
வாழிதமிழ்த் தொண்டர்கொடை வழங்குநர்பண்
ணலம்பெருக வாழி வாழி!

கரந்தை,
விகாரி-புரட்டாசி, ௨௫,
11—10—59.

இங்ஙனம்,
ச. சுயம்பிரகாசம், *பி. ஏ., பி. எல்.,*
சங்கத் தலைவர்.

பழந்தமிழர் காட்சித் திறன்.

K. S. மகாதேவன், M. A., B. Sc.,

பேரன்புமிக்க தலைவர் மலையப்பன் அவர்களே! அறிஞர் பெருமக்களே! மாணவ மாணவிக் குழந்தைகளே!

உங்கள் அனைவருக்கும் என் நன்றிகலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று இங்கு அவைத் தலைவராகத் திகழும் திருவாளர் மலையப்பன் அவர்கள் மொழி என்பது கருத்தைத் தாங்கிச் செல்லும் ஒருவகை வண்டி (Vehicle) என்று அழகாக எடுத்துக் கூறினார்; ஆனாலும், வண்டிக்கும் மொழிக்கும் ஒரு வேறுபாடு உண்டு! வண்டி, ஓரிடத்தில் இருப்பவர் தரும் பொருளை மற்றோரிடத்திலிருப்பவர்க்கு எடுத்துச் சென்று தருவதோடு நின்று விடுகிறது; ஆனால், மொழியாகிய வண்டி ஒருகாலத்திலிருப்பவர் தரும் கருத்துக்களை பல்லாயிரக்கணக்கான ஆண்டுக் காலத்திற்குப் பிறகு வருகிறவர்க்கும் எடுத்துச் சென்று சேர்க்கும் பெரும் பணியையும் செய்து முடித்திருக்கின்றது; இந்த உலகில் இருந்து மறைந்த பல மொழிகள் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட எளிய மாட்டுவண்டிகளைப்போல் ஓரிடத்திலிருப்பவர் வழங்கிய கருத்தைப் பேச்சாகவும், கடிதமாகவும், கட்டுரையாகவும் மற்றொரு இடத்தில் ஆனால், அதே காலத்தில் வாழ்ந்தவருக்கு எடுத்துச்சென்று தந்ததோடு நின்று விட்டன. ஆற்றல் குறைந்த அத்தகைய மொழிகள் காலமென்ற நீண்ட சாலையிலே சிறிது தொலைவு ஓடுவதற்குள் அச்சு வேறு கால் வேறாகக் கழன்று போய்விட்டன! ஆனால் தமிழ் வண்டியோ, அச்சில் உறுதியும், ஆர்க்காலில் திண்மையும் பெற்றிருப்பதால் எந்த மாடு எப்பக்கம் இழுத்து இடக்குச்செய்தாலும் அன்றிலிருந்து இன்றுவரை உடையாமலும், உருக்குலையாமலும் ஓடிக்கொண்டேயிருக்கிறது! நாளொன்றுக்கு எட்டுத்தேரினைச் செய்கின்ற தச்சன் ஒருவன் ஒரு திங்கள் முயன்று ஒரு தேர்க்காலைச் செய்த செய்தியை ஒளவையார் நமக்கு அறிவிக்கின்றார்! அப்படி என்றால், நம் தமிழ் மொழி, வண்டியை இயற்றிய பழங்காலத் தச்சர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? இம்மென்றால் எழுநூறும், அம்மென்றால் ஆயிரமும் அவர்களால் பாடமுடியும் என்பதை நான் மறுக்கவில்லை? ஆனாலும், அவர்கள் பாடிய ஒவ்வொரு பாடலும் பன்னாள் அரிது முயன்று பெற்ற

காட்சித் திறனுக்குப் பிறகே தோன்றியிருத்தல் வேண்டும் என்பதை மட்டும் நான் உங்கள் முன்னர்த் துணிந்துகூற விரும்புகிறேன்.

எல்லோரும் காணலாம்!

கண்ணுடையவரெல்லாம் காணலாம்! எனவே காட்சித் திறன் என்பது எவருடைய தனியுடைமையுமன்று. எந்த நாடும் அதனைத் தனக்கே உரியது என்றும் எண்ணிவிட முடியாது. இயற்கை ஒருநாட்டிற்கு அறிவிக்கும் உண்மையை மற்றொரு நாட்டிற்கும் அறிவிப்பதில் எத்தகைய தடையும் இருக்க முடியாது. இருந்தாலும், அறிவியல் என்றதும் மேல்நாடுதான் நம் நினைவுக்கு வருகின்றது. அறிவியலறிஞர் என்றால், கலிலியோவும், நியூட்டனுமே நம் கண்முன்வந்து நிற்கின்றனர். ஆனால், இவர்கள் கண்டனவாகப் பேசப்படும் பல செய்திகளை இவர்கள் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே தமிழர்கள் அறிந்திருந்தனர் என்ற உண்மையை எடுத்துச் சொன்னால், நம்மிலேயே சிலருக்கு வெகுளி பிறந்துவிடுகிறது! ஆங்கிலேயர் களும் அமெரிக்கர்களும் கண்டுபிடித்தனவாக இதுவரை சொல்லப்பட்ட பல செய்திகளைத் தங்கள் நாட்டு அறிஞர்களே கண்டு பிடித்ததாக இன்று உருசியர்கள் சான்றுகாட்டி நிறுவி வருகின்றனர். எனவே, உருசிய நாட்டினும் மிகுதியான பழைமையும், பண்பாடும்பெற்ற தமிழகத்து அறிஞரும் காட்சித் திறனுடையவர்களாகத் திகழ்ந்து வந்தனர் என்பதை உலகம் விரைவில் ஒத்துக்கொள்ளத்தான் போகிறது.

பாஸ்கலும் ஔவையாரும்:

பொருள்களை அவை காணப்படும் உருவநிலைக்கு (state of existence) ஏற்பத் திண்பொருள் (solid) நீர்ப்பொருள் (liquid) ஆவிப்பொருள் (gas) என்று பிரித்துப் பேசுகிறோம். திண் பொருளுக்கும் ஆவிப்பொருளுக்கும் இல்லாத சிறந்த இயல்புகள் நீர்ப்பொருளுக்கு இருப்பதை இன்றைய அறிவியல் நமக்கு அறிவுறுத்துகின்றது. திண்பொருளையும் ஆவிப் பொருளையும் அழுத்தம் (pressure) கொடுத்து அளவில் சுருங் கும்படி செய்யலாம். அரிசி, உமி, தவிடு போன்ற பொருள்களை 'அழுத்தி அழுத்தி' அளந்து ஒரு படியை முக்கால் படியாகக் காட்டலாம்! அதேபோன்று ஒரு உதைபந்தில் (foot ball) இயல்பாக அது கொள்வதைப்போன்று மூன்று மடங்கு அள விற்கு வேண்டுமானாலும் காற்றினை அடைத்து வைக்கலாம்!

ஆனால், எவ்வளவுதான் 'அழுத்தி அழுத்தி' அளந்தாலும் ஒரு படி பாலையோ, எண்ணெயையோ, அல்லது நீரையோ முக்கால் படியாகக் குறைத்து அளந்து காட்டமுடியாது! இதிலிருந்து அழுத்தத்தினால், நீர்ப்பொருள்கள் அளவில் சுருங்குவதில்லை என்பது விளங்குகின்றது. இவ்வியல்பை நீர்ப்பொருளின் சுருங்கா இயல்பு (Non-compressibility of liquids) என்று அறிவியல் குறிப்பிடுகிறது. இவ்வுண்மையைக் கண்டுபிடித்தவர் கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாஸ்கல் (Pascal) என்று சொல்வர். ஆனால் இதே உண்மையைக் கம்பர் காலத்தில் (12-ஆம் நூற்றாண்டு) தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்த ஔவையார் அழகாக எடுத்துக் கூறியுள்ளார்! இயல்பாக நிகழ்ந்து வருவதை யாரும் எளிதில் மாற்றிவிட முடியாது என்ற கருத்தை வலியுறுத்த விரும்பிய அவர் நீர்ப்பொருளின் இந்தச் சுருங்கா இயல்பை

"ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நால்நாழி—தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தந்தம்
விதியின் பயனே பயன்"

என்ற வெள்ளைப்பாவால் வெள்ளையரும் வியக்கும்படி வெளியிடுகிறார்! இங்கு 'ஆழ்கடல்நீர்', 'ஆழ அமுக்குதல்' ஆகிய தொடர்கள் அறிவியல் நுட்பம் வாய்ந்தவை. நீருக்கு அழுத்தம் (pressure) உண்டு; நாம் எவ்வளவுக்கு எவ்வளவு ஆழத்தில் மூழ்கிச் செல்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு அது மிகுதியாக நம்மை அழுத்தும். அதாவது, ஆழத்தைப் பொறுத்து அழுத்தம் அதிகமாகும். இவ்வுண்மையினையும் பாஸ்கலே கண்டு கூறியதாக அறிவியல் ஏடுகள் பேசுகின்றன. ஆனால், இங்கு எடுத்துக்காட்டப்பட்ட 'ஆழ்கடல்நீர்', 'ஆழ அமுக்கி முகக்கினும்' என்ற தொடர் "ஆழத்தைப் பொறுத்து அழுத்தம் அதிகமாகின்றது" என்பதை நன்கு சுட்டுகின்றனவல்லவோ?

நியூட்டனும் மணிவாசகரும் :

பொருள்களின் இயக்கம் (Dynamics) பற்றிய உண்மைகளை உணர்ந்து உலகத்துக்கு உரைத்துப் புகழ் கொண்டவர் அறிஞர் ஐசக் நியூட்டன் (Sir Issac Newton) என நாம் கேள்விப்படுகிறோம். "வேற்று விசையால் தூண்டப்படாத வரையில், நிற்கின்ற பொருள் நின்றுகொண்டே இருக்கும், ஓடுகின்ற பொருள் அதே வேகத்தில், அதே திசையில் ஓடிக்கொண்டே இருக்கும்"

என்று அவர் கூறினர். இதனையே நியூட்டனின் **முதலாம் இயக்க முறைமை** (First law of motion) என்று நாம் சொல்கிறோம். இந்த முறைமையின் அடிப்படையில்தான் உலகத்தில் செயல் படும் பலவகை ஆற்றல்களையும் (forces) பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக நாம் மேசையின்மீது ஒரு பொருளை நகர்த்திவிட்டால், இம்முறையின்படி அது நகர்ந்து கொண்டே இருக்க வேண்டும்! ஆனால், அது அப்படிச் செய்வ தில்லை, வரவர வேகம் குறைந்து நின்று விடுகிறது! இதிலிருந்து "வேற்று விசை" (external force) ஒன்று அப்பொருளைத் தடுக்கின்றது என்று முடிவுசெய்து விடுகிறோம். அந்த விசை யையே **எதிர்ப்பு விசை** (friction) என்று பெயரிட்டு அழைக் கின்றோம். நியூட்டனின் இம்முறைப்படி வானத்துக்கோள்க ளெல்லாம் "அதே வேகத்தில் அதே திசையில்" ஓடிக் கொண்டே இருக்கவேண்டும்! இப்படி நிகழ்ந்தால், எல்லாக் கோள்களும் இமைப்பொழுதில் **வான் வெளியின்** (space) எல்லை யற்ற ஆழத்திலே சென்று கண்ணுக்கு எட்டாமல் மறைந்து விடும்! ஆனால், நடைமுறையில் அப்படி நிகழ்வதில்லை. ஏதோ ஒருவிசை கோள்களையெல்லாம், ஒரேவேகத்தில், ஒரே திசை யில் ஓடி மறைந்துவிடாமல் இழுத்து வைத்துக்கொண்டிருக் கிறது என்று உடனே முடிவு செய்கிறோம். அதனையே **கவர்ச்சியாற்றல்** (gravitational force) என்று பெயரிட்டு அழைக்கின்றோம். சுருக்கமாகக் கூறவேண்டுமானல் "ஆற்ற லின்றி ஒரு பொருளும் அசையாது" என்ற உண்மைக்கு அடிப் படையாக நியூட்டனின் இவ்வியக்க முறைமை அமைந்து கிடக் கின்றது. ஆனல் "**அவனன்றி ஓரணுவும் அசையாது**" என்ற பொன்மொழி எவர்க்கும் தெரிந்த ஒன்றாகவன்றோ இருந்தது! ஆற்றலைக் கடவுளாகக்கண்டு அதனை ஆண்பாலாக்கி அவன் என்று அழைத்தல் மக்கள் இயல்புதானே? எனவே தமிழகத்திலும் ஓர் இயக்கமுறைமை இதற்கு அடிப்படையாக இருந்திருக்க வேண்டுமன்றோ? தமிழகத்தின் அந்த நியூட்டனைத் தேடி நாம் நீண்ட தொலைவு செல்லவேண்டுவதில்லை! இதோ வரு கின்றார் மணிவாசகர். அவரின் திருவாயிலிருந்து உதிரும் பொருள்களின் இயக்க முறைமையைக் கேளுங்கள்!

"நடப்பன நடாஅய்
கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறுவி
சொற்பதங் கடந்த
மேலோன் !! (திருவாசகம்)

சொல்லாலும் வடித்துக் கூறமுடியாத இறைவனின் ஆட்சியில் நிகழும் இயற்கை உண்மை எது என்று இவ்வரிகள் விளக்குகின்றன. "நடக்கும் பொருள் நடந்துகொண்டே இருக்கும். கிடக்கும் பொருள் கிடந்தபடியே இருக்கும்; நிற்கும் பொருளோ, நின்றுகொண்டே இருக்கும்! நியூட்டன் 17-ஆம் நூற்றுண்டிலே வந்தவர். மணிவாசகர் கி. பி. மூன்றும் நூற்றுண்டிலே வாழ்ந்தவர்! இருந்தாலும் பொருள்களின் இயக்கமுறைமை கண்ட பெருமை தமிழர்க்குக் குரலிலே வலிமை இல்லாத காரணத்தால், இன்றும் நியூட்டனையே சார்ந்திருக்கின்றது!

கலிலியோவும் சிவஞான முனிவரும்:

கோவிலில் தொங்கிய விளக்கிலே காலம் ஏறி அமர்ந்து ஊசலாடுவதைக் கலிலியோ கண்டார். ஆடுகின்ற விளக்கின் ஒவ்வோர் அசைவும் (oscillation) ஒரே அளவான காலத்தை எடுத்துக் கொள்வதை உணர்ந்தார். வீடு திரும்பிய அவர் பல சோதனைகள் செய்து நீளம் மிகுந்த பொருள்கள் மெல்ல அசைந்தாடுவதையும், நீளம் குறைவாக உள்ள பொருள்கள் விரைந்து அசைந்தாடுவதையும் கண்டுபிடித்தார். இந்த அடிப்படையில் எழுந்தவை தாம் இன்று கடிகாரமுள்ளின் வேகத்தைக் கட்டுப்படுத்தியபடி அசைந்தாடிக் கொண்டிருக்கும் ஊசலிகள் (Pendulums). கடிகாரத்தின் முள் விரைந்து நகரவேண்டுமானுல் ஊசலியினைத் திருகி மேலே ஏற்றி அதன் நீளத்தைக் குறைக்கின்றோம்; கடிகாரம் மெல்லச் செல்லவேண்டுமென விரும்பினுல், திருகாணியைத் தளர்த்தி இறக்கி ஊசலியின் நீளத்தை அதிகப்படுத்துகிறோம். நீளத்திற்கும் காலத்திற்கும் இந்தத் தொடர்பைத் தமிழ் நாட்டில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் புலவரும் அறிந்திருந்தார் என்பதை இன்று உலகம் அறியுமா?

பெரிய ஊசலும் சிறிய ஊசலும்.

தமிழ்நாட்டில் ஊஞ்சல் ஆடுவது மகளிரின் சிறந்த விளையாட்டு. இதனுல் பெண்பால் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் "ஊசல்பருவம்" என்று ஒரு பகுதி இடம்பெற்றது. இதோ ஒரு காட்சி: நீண்டு தொங்கும் ஊஞ்சலிலே தென்குளத்தூரில் எழுந்தருளிய அமுதாம்பிகை மலைமகளின் மாற்றுருவம். அலைமகள் ஒருபுறமும் கலைமகள் ஒருபுறமுமாக நின்றுகொண்டு மலைமகள் இருக்கும் அவ்வூஞ்சலை அசைத்து ஆட்டுகின்றனர்! ஆனுல் அதைவிட விரைந்து அசைந்தாடுகின்றது மற்றோர் ஊஞ்சல். அந்த ஊஞ்சல் நீளத்தில் குறைந்தது! அதுவே

அமுதாம்பிகையின் காதிலே தொங்கும் குழை! அந்தச் சிறிய குழைபோல ஊஞ்சலும் விரைந்து ஆடவேண்டும் என்று விரும்பிய அலைமகளும் கலைமகளும் ஊஞ்சலை 'வலித்து வலித்து' ஆட்டிப் பார்த்தனர்; ஆனால், ஊஞ்சலின் வேகம் அதிகரித்ததாகத் தெரியவில்லை! அமுதாம்பிகை அவர்களின் அறியாமை நோக்கிச் சிரித்தாள். அவர்கள் இருவரும் நாணத்தால் முகங் கவிழ்ந்தனர்! அமுதாம்பிகை ஞாலமுழுவதும் ஒருங்கீன்ற நங்கை. இயற்கைச் சட்டங்களெல்லாம் அவளுக்குத்தானே தெரியும்? அலைமகளென்ன, கலைமகளென்ன? அவர்கள் கணவராகிய திருமாலும் பிரமனுமே வந்து ஆட்டினாலும் ஊஞ்சலின் நீளம் குறைந்தாலொழிய அதன் வேகத்தில் விரைவு காணமுடியாதே! கலிலியோ கோவிலில் ஆடிய விளக்கில் கண்டுகூறிய அதே இயற்கைச் சட்டத்தை வீட்டில் ஆடிய ஊஞ்சலிலும், மகளிர் காதில் தொங்கிய குழையிலும் கண்டு இவ்வாறு கூறியவர் **சிவஞான முனிவராவார்.** அவரைக் கலிலியோ வாழ்ந்த காலத்திற்கு மிகவும் பிற்பட்ட காலத்தினர் என்று சொல்லிவிட முடியாது! அறிவியல் கருத்துக்களைத் தாங்கி மிளிரும் அவர் பாடல் வருமாறு:—

"திங்களொளி காட்டுமுக மீதுலவு நாட்டச்
    செழுங்கய லுதைந்தூக்கலாற்
செம்பொனிழைத்தமக ரக்குழைக ளுஞ்செவிச்
    செங்கனக வூசலாடப்
பங்கய விருக்கைமட மாதரது நோக்கியிரு
    பாலுமிரு வேமாட்டவும்
பாயுங் கயற்குல மசைக்குமவ் வூசலிற்
    பாய்ந்திலதிவ் வூசலெனநீள்
அங்கையின் வலித்துநனி யாட்டுதொறு நின்வா
    யரும்புநகை நிலவெழிலினுக்
காங்கவர் முகத்திங்கள் சாயப் புராணமறை
    யாகம மளந்தறிவரும்
புங்கவன் மருங்குகுடி கொண்டவமு தாம்பிகை
    பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
    பொன்னூச லாடியருளே."

கலிலியோவிற்குமுன் கபிலர்.

ஒளியைக் கோட்டகம் (Refraction) அடையச் செய்வதனுல், தொலேவில் உள்ள பொருளின் உருவத்தை அண்மையில் வந்து தோன்றும்படிச் செய்யலாம் என்று கண்டவர் கலிலியோ சொல்கிருேம். வீட்டின் மேல்மாடத்தில் இருந்த கலிலியோ ஒருநாள் தமது மூக்குக் கண்ணுடியைக் கழற்றித் துடைத்து விட்டுத் தூசி போய்விட்டதா என்று அறிவதற்காக, ஒளி வரும் வழியில் உயர்த்திப் பிடித்துப் பார்த்தார். அஃது இரண்டாக மடிக்கும் அமைப்புடன் கூடிய கண்ணுடி ஆதலால், அவர் மடித்து வைத்திருந்த நிலேயில் அதன் ஒரு வில்லே மற்ருெரு வில்லேமீது பொருந்தி இருந்தது. என்ன வியப்பு! தொலேவில் உள்ள ஒரு கோபுரத்தின் உருவம் சிறியதாக அவர் கண்ணுடியில் வந்து தெரிந்தது! இரண்டு கண்ணுடி வில்லேகளுக்குத் (lenses) தொலேவிலுள்ள பொருள்களே அருகில் கொண்டுவரும் ஆற்றல் இருப்பதை அறிந்து கொண்டார்! உடனே ஈயக்குழாய் ஒன்றின் இருகோடியிலும் இருகண்ணுடி வில்லேகளேப் பொருத்தித் தமது தொலேநோக்கியை (Telescope) உருவாக்கி விண்ணியலில் பெரும் புரட்சியைச் செய்துவிட்டார்! ஆனுல் கலிலியோ கண்ட இதே காட்சியை வீட்டு மேல்மாடியும், மூக்குக்கண்ணுடியும் இல்லாமல், கி. பி. இரண்டாம் நூற்ருண்டளவிலேயே ஒரு தமிழன் கண்டு கூறியுள்ளான் என்ருல் அதனே ஒப்புக்கொள்ள இன்று உலகம் முன்வருமா? வள்ளுவரின் சிறிய குறட்பாக்கள் பெரிய பொருள்களேத் தம்மகத்தே கொண்டு காட்டுகின்றன. இதற்கு உவமைதேடிச் சென்ருன் ஒரு தமிழன்; சென்ற வழியிலே சிறியதொரு புல்; அதன் தலேயில் தினேயினும் சிறியதான நீர்த்துளி! நெடுந்தொலேவிலே ஒரு பனேமரம். வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்து நிற்கின்றது! ஆனுல், என்ன வியப்பு! பெரிய பனேமரத்தின் உருவம் எவ்வளவு அருமையாக அந்தச் சிறிய நீர்த்துளியிலே தெரிகின்றது! இந்த அரிய காட்சியையே வள்ளுவரின் குறளேப் பெருமைப்படுத்தும் உவமையாக அமைத்தான் அத்தமிழன்!

“ தினேயளவுபோதாச் சிறு புல்நீர் நீண்ட
பனேயளவு காட்டும் படித்தால்—மனேயளகு
வள்ளேக்(கு) உறங்கும் வளநாட வள்ளுவனுர்,
வெள்ளேக் குறட்பா விரி,” (திருவள்ளுவமாலே)

இது கபிலர் பாடல். இங்கு ஒரு கேள்வி எழலாம்! கலிலியோ கண்ட கண்ணுடிக்காட்சி தொலேநோக்கி எழுவதற்குத் துணே

செய்தது. ஆனால் கபிலர் கண்ட இந்தப் "புல்நுனி நீர்க்காட்சி" யால் என்ன எழுந்தது என்று எவரும் கேட்க முன்வரலாம்! பொதுவாக இயற்கைப்பொருளின் தன்மையை உணர்வதுதான் அறிவியல்! வேண்டிய கருவிகளை அமைத்துக் கொள்ளுதல் பொறியியலே (engineering) ஆகும். அறிவியல் அறிவின் ஆழத்தைப் பொறுத்து வளரும். பொறியியலோ தேவையைப் (necessity) பொறுத்தே வளரும்! தொலை நோக்கி வழியே பாய்ந்த மேல்நாட்டார் அறிவு, விண்ணகம் எல்லையற்று விரிந்து கொண்டு ஓடுகிறது என்ற உண்மையை இருபதாம் நூற்றாண்டில் தான் உணரத் தொடங்கியிருக்கின்றது! ஆனால் இதே "விரியும் விண்ணகக் கருத்தினைத் (expanding universe theory) தமிழகம்,

"அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந்தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"

(திருவாசகம்)

என்ற வரிகளால் ஆயிரத்து எழுநூறு ஆண்டுகட்கு முன்னரே அறிந்து உணர்த்தியிருக்கின்றது. எனவே

"மாங்காய்ப் பாலுண்டு
மலைமேல் இருப்பவர்க்குத்
தேங்காய்ப்பா லேதுக்கடி ?"

என்று கேட்ட சித்தரின் வழிநின்று "தாமே அறிந்துணரும் தமிழ்நாட்டில் வாழ்வார்க்குத் தொலைநோக்கி ஏதுக்கடி என்று தான் விடைசொல்ல முடியும்!

கண்ணுக்கு வழி! காதுக்குத் திரை!

ஒளி, ஒலி என்ற சொற்களுக்கு இடையில் ஒற்றுமை இருப்பதுபோலவே, அவற்றின் இயல்பினும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. சிறப்பாக, இரண்டும் அலை அலையாக அசைந்து பரவுகின்றன. இருப்பினும், ஒளிக்கு வழிவிடும் சிலபொருள்கள் ஒலியை ஏனோ தடுத்து நிறுத்தி விடுகின்றன! இவ்வுண்மை இன்றுகூட நம்மில் பலர்க்குத் தெரியாது! கண்ணாடிக் கதவு வழியாக அறையினுள் இருப்பவரைப் பார்த்தும், பெயர்சொல்லி அவரை அழைக்கின்றோம்! ஆனால் நம் பேச்சு அவர் காதுக்கு

எட்டுவதில்லை என்பதை நாம் பிறகுதான் அறிந்து கொள்கின்றோம்! ஆனால் ஒளி, ஒலி பற்றிய இவ்வுண்மையை நன்கு உணர்ந்த சாத்தனார், (கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்) மணிமேகலையையும், உதயகுமரனையும் பிரித்து வைக்க, அதுவரை எவரும் கையாளாத ஒரு புதுமையைக் கையாண்டு பார்க்கின்றனர்! இருவருக்கும் இடையில் அவர் எழுப்பிய பளிங்குச்சுவர் ஒளிக்கு வழிவிடும்; ஆனால் ஒலியைத் தடுத்து நிறுத்திவிடும்! உதயகுமரன் மணிமேகலையைப் பார்த்தான்; மணிமேகலையும் உதயகுமரனைப் பார்த்தாள்; ஆனால் உதயகுமரன் பேசிய ஆர்வமொழிகள் மணிமேகலையின் செவியினைச் சேரவில்லை. மணிமேகலை பேசியிருந்தாலும், உதய குமரன் கேட்டிருக்கமாட்டான்!

கண்ணுக்கு வழிவைத்துக் காதுக்குத் திரையிடும் இவ்வழகிய மண்டபத்தைச் சாத்தனார் "விளிப்பு அறைபோகாது மெய்புறத் திடூஉம் பளிக்கறை மண்டபம்" என்று சொல்லுகின்றார். சாத்தனார் ஏன் இந்தப் பளிங்குச் சோதனையில் இறங்கினார்? இஃது இன்றும் புலவர்கட்குப் புரியாததொரு புதிராக இருக் கின்றது! இதற்கு விடை இப்படித்தான் கூறமுடியும். சாத்தனார் வள்ளுவர் வழி நிற்பவர்; வள்ளுவர் கூறும் பொருளே யன்றி, அவர் மொழியையும் பொன்னேபோல் எடுத்துப் போற்றுபவர்; வள்ளுவர் ஓர் இடத்தில் ஒளியையும் ஒலியையும் பற்றியதொரு கொள்கையை மிகவும் துணிந்து கூறியிருக்கின்றார்.

> "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
> என்ன பயனு மில"

என்பதே அது! இவ்வுண்மையையே சாத்தனார் சோதனை வழியாக நிறுவ முற்பட்டார்! கண்ணும் கண்ணும் உறவாட விட்டார்! வாய்ச்சொல் பயனில்லாது போகும்படிப் பளிங்குச் சுவரை எழுப்பி வழியடைத்தார். ஆம்! மணிமேகலை உதய குமரன் காதல் தடைப்பட்டுவிடவில்லை; வாய்ச்சொற்கள் பயனற்றுப்போன நிலையிலும், அது வளரவே செய்தது; வள்ளுவர் கொள்கை தக்க சோதனைமூலம், அறிவியல் அடிப் படையில் நிறுவப்பட்டு விட்டது.

சாத்தனார் விளைவு?

பளிங்குப் பொருளில் ஒளி ஊடுருவும் தன்மையைச் சாத்தனார் கண்டார்; அப்படி ஊடுருவும் பொழுது, ஒளியின் நிறம் மாறுபடுவதை அறிஞர் சி. வி. இராமன் கண்டார்!

இதனையே அறிவியல் மொழியில் கூறவேண்டுமானால், பளிங்குப் பொருளின் வழியே ஒளி புகுந்து வெளிவரும்பொழுது ஒளியின் அலை நீளத்தில் (Wave Length) மாற்றம் ஏற்படுகின்றது என்று இராமன் கண்டு கூறினார். இதனையே நாம் இராமன் விளைவு (Raman's effect) என்று சொல்கின்றோம். உண்மையில் இராமன் விளைவுக்கு அடிப்படையாக இருந்தது சாத்தனார் விளைவு (Sathanar's effect) என்பது தெரிகின்றதன்றோ?

புலவர்க்குப் புலி

பிள்ளைத் தமிழில் வரும் 'அம்புலிப் பருவம்' பற்றி பேசுகின்ற பேராசிரியர்கள் "அம்புலி புலவர்க்குப்புலி" என்று கூறுவர்! ஆனால், அது நெடுநாள் வரையில் எனக்கு விளங்காமலேயே இருந்தது. ஒரு நாள் தொடர்வண்டிப் பயணத்தின் தொல்லையை மறக்கவேண்டி இரயில் நிலையத்தில் கதைப்புத்தகம் ஒன்றை வாங்கிப் பிரித்தேன். கதைத் தலைவிக்கு உறக்கம் வரவில்லை போலும்! அவள் கூறத் தொடங்கினாள்.

"நடுநிசி! மணி பன்னிரண்டு! அன்று வளர்பிறையின் மூன்றாம்நாள். வானத்தை நகத்தால் கீறி விட்டிருந்ததைப் போன்றிருந்த பிறைச் சந்திரன் மெதுவாக மேலேறிக்கொண்டிருந்தது".

கதைத் தலைவியின் இக்கூற்றை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை!

ஒன்று, காதல் வேகத்தில் தலைவியின் மூளை குழம்பியிருத்தல் வேண்டும், அல்லது அவள் பூமியின் வடகோடியில் எஸ்கிமோ நாட்டில் இருத்தல் வேண்டும். இரண்டும் இல்லையென்றால், 'நடுநிசி' என்றறிவித்த அந்தக் கடிகாரம் உடனே பழுது பார்க்கப்பட வேண்டும்! இனி மூன்றாம் நாள் வளர்பிறை 'மேலேறுவதை'க் காண எங்குச் செல்வது என்று யாராலும் கூறமுடியாது!!

இப்புத்தகத்தை வாங்கியதிலே எனக்கு ஒரு பயன் கிட்டியது. இப்பொழுதுதான் 'அம்புலி புலவர்க்குப் புலி' என்பதன் பொருள் எனக்குத் தெளிவாக விளங்கிற்று. இரவு பன்னிரண்டு மணிக்கு நடுநிசியில் மூன்றாம் பிறையைக் காணும் இரக்கத்திற்குரிய கதையாசிரியரை 'அம்புலிப் புலி' இவ்வளவு எளிதாக அடித்து விழுங்கிவிட்டதே!

நாம் இன்று அறிவியலை மணந்து வாழும் காலத்திலே வாழ்கின்றோம்! ஆனால் பழங்காலத்தில் வாழ்ந்த புலவர்கள்

இந்த அம்புலிப் புலியிடத்தில் எத்தகைய நுட்பமாக நடந்து வெற்றி கண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் இங்கு நாம் உணர வேண்டும்.

கோவலன் கண்ணகியோடு பூம்புகாரினின்றும் இரவிலே நீங்குகின்றான். வைகறை நேரம்; ஞாயிறு எழுவதற்கு இன்னும் நாழிகைகள் கழிதல் வேண்டும். ஆனால், மீன்பூத்த வானத்தி லிருந்து வெண்மதி நீங்கிச்சென்று மறைந்து விட்டது. இரவின் பிற்பகுதியில் இருள் படர்ந்து நின்ற அக்காலம் **வளர்பிறைக் காலம்** என்பதை இளங்கோவடிகளார்,

"வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்திகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிருள் நின்ற கடைநாள் கங்குல்"

என்று எத்துணை நுட்பமாகச் சுட்டிச் செல்கின்றார்!

இவ்வாறே **தேய்பிறை** நாளைச் சொல்லவரும் சிந்தாமணி யாசிரியர், இரவின் முற்பகுதியிலே இருள் மண்டிக்கிடந்தாலும் பின்னர் ஏற்றிவைத்த கைவிளக்குபோலக் கீழ்திசையில் திங்கள் எழுந்து இருளை அகற்றச் சிறிது நாழிகைக்கெல்லாம் கீழ் வானத்திலே ஞாயிறு கிளர்ந்தெழுந்தது என்ற உண்மையை,

"ஏறனாற் கிருளை நீக்கக்
கைவிளக் கேந்தியாங்கு
வீறுயர் மதியம் தோன்ற
விரைவொடு போயபின்றை
மாறிலாப் பருதிவட்டம்
வருதிரை முளைத்த வாங்கண்"

என்று கூறுகிறார்.

இவ்வாறே, **முழுமதி நாட்களில்** ஞாயிறும் திங்களும் எதிர் எதிராக (diametrically opposite) இருக்கும் என்ற வான நூல் உண்மையை மணிமேகலை ஆசிரியர் பூம்புகாரில் அத்தகைய தொரு முழுமதி நாள் மாலைக்காலத்தை வருணிக்குமிடத்து,

"குணதிசை மருங்கில் நாண்முதிர் மதியமும்
குடதிசை மருங்கில் சென்றுவீழ் கதிரும்
வெள்ளி வெண்தோட்டோடு பொன்தோடாகப்"

புகாரென்னும் பூங்கொடி நல்லாளுக்குப் பொருந்தியிருந்த காட்சியை மிகுந்த காட்சித் திறனுடன் கூறிச் செல்கின்றார்!

கலைஞரும் காட்சியும்

இயற்கைப் பொருள்களின் இயல்பைக் கூறும்போது கலைஞர்கள் தவறு செய்துவிடுதல் அடுக்காது. இதனால் கலைஞர்களும், எழுத்தாளர்களும் அறிவியலாராக மாறிவிடவேண்டுமென்பது பொருள் அன்று. அறிவியலாரின் வழியிலே நான்கு படிகள் அமைந்துள்ளன, அவை முறையே,

காட்சி (observation)
ஐயம் (interpretation)
துணிவு (prediction)
தெளிவு (realisation)

ஆகியவையாகும். எந்த ஒரு பொருள் பற்றி முடிவுசெய்வதற்கும் அவர்கள் இப்படிகள் ஒவ்வொன்றிலும் நின்று அதனை நோக்கி உணர்தல் வேண்டும். இப்படிகளுள் காட்சி என்ற முதற் படி கலைஞன், அறிவியலான் ஆகிய இருவருக்கும் பொதுவானது. காட்சிப்படியில் ஏறிநின்ற பிறகு வேண்டுமானால், கலைஞர்கள் தம் கற்பனைச் சிறகைப் பயன்படுத்தி எங்கு வேண்டுமானாலும் பறந்து செல்லலாம். ஆனால், காட்சிப்படியே அறியாமல் கற்பனைச் சிறகடிக்க முயல்வது சிறுவர்களும் எள்ளி நகையாடும் செயலாகப் போய்விடுகிறது!

பழந் தமிழ்ப் புலவர்கள் இந்தத் தவறினைச் செய்யவில்லை. நாம் அவரினும் உயராவிட்டாலும் தாழாமல் பார்த்துக் கொள்வோமாக.

கையறவு.

17—10—59 சனிக்கிழமை காலை நம் சங்கத்தின் நீண்டநாள் உறுப்பினரான திரு. பாப்பையர் என்று அழைக்கப்பெறும் P. சுந்தரம் அய்யரவர்கள் எதிர்பாராவகையில் இயற்கை எய்தியமைக்கு வருந்துகின்றோம். திரு. பாப்பையரவர்கள் காலஞ்சென்ற சங்கத் தலைவர் தமிழவேளவர்களின் எழுத்தாளராகப் பல்லாண்டுகள் பணியாற்றியவர்கள். உண்மையும் நேர்மையும்கொண்ட உலையாமுயற்சியாளர். திரு. ஐயரவர்களின் குடும்பத்தாருக்குச் சங்கத்தின் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

பொழிற்றொண்டர்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

பழந்தமிழ் நாட்டில் கலை வளர்ச்சி

சாமி. சிதம்பரனர்.

ஓவியக்கலை :

ஓவியக்கலை என்பது ஒரு சிறந்த கலை. நடந்த பல நிகழ்ச்சிகளைப் படமாக எழுதிக்காட்டுவது. கைத்திறமும் நுண்ணறிவும் உள்ளவர்களே சிறந்த ஓவியராகமுடியும். கற்பனை உள்ளம் படைத்த ஓவியர்கள்தாம் கைத்திறம் உள்ள ஓவியராகவும் உயரமுடியும். ஓவியம் என்பது சித்திரம்.

ஓவியத்தை, சிறுவர், பெரியோர் அனைவரும் காண விரும்புவார்கள் ஓவியங்களைக் காணவிரும்பாதவர்கள ஒருவரும் இல்லை, இக்கலையின் மூலம் மக்களுக்குப் பல உண்மைகளை உணர்த்தமுடியும். மக்களுக்கு அறிவையும் ஒழுக்கத்தையும் புகட்ட முடியும். ஓவியங்களின் வழியாகச் சிறுவர்களுக்கும் பெரியோர்களுக்கும் கல்விப் பயிற்சியும் அளிக்கமுடியும். ஓவியக் கலை கண்ணையும கருத்தையும் கவரும் ஒரு சிறந்த கலை. பண்டைத் தமிழர்கள் இக்கலையை மக்களுக்கு நல்லறிவூட்டவும் நீதி நெறிகளைக் கற்பிக்கவும் பயன்படுத்தி வந்தார்கள்.

ஒரு நிகழ்ச்சியை எழுத்தால் எழுதாமல் ஓவியங்களால் எழுதிக் காட்டிவிடலாம். எத்தகைய நிகழ்ச்சிகளையும், வாயால் சொல்லாமல்—எழுத்தால் எழுதிக் காட்டாமல்—சித்திரத்திலே அமைத்துக்காட்ட முடியும். சிறந்த ஓவியங்கள் வாய்பேசாமல் பல நிகழ்ச்சிகளை நமக்குச் சொல்லும். இத்தகைய சிறந்த ஓவியங்களை இன்றும் நாம் காண்கின்றோம்.

இன்னும் பல கோயில்களிலே, பல ஓவியங்கள் தீட்டப் பட்டிருப்பதைக் காண்கின்றோம். மதுரைக் கோயிலுக்குச் செல்பவர்கள், அக்கோயிலின் சுவர்கள், திருவிளையாடல் புராணக் கதை முழுவதையும் ஓவியங்களால் உரைப்பதைக் காணலாம்.

பண்டைக்காலத்தில் கோயில் மண்டபங்களிலும், பொது இடங்களிலும், மக்களுக்கு அறிவூட்டும் ஓவியங்கள் வரையப் பட்டிருந்தன. இவ்வுண்மை பரிபாடலிலே காணப்படுகின்றது.

செவ்வேளைப் பாடும் பத்தொன்பதாவது பரிபாட்டிலே, பரங்குன்றத்தில் உள்ள சித்திர மண்டபத்தின் சிறப்புக் கூறப் படுகின்றது.

“சூரியனுடன் சேர்ந்து சுழல்கின்ற சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவை சக்கரவாளகிரியைச் சுற்றி வருவதைப்போல் எழுதப்பட்டுள்ளன. கிரகங்களின் இக்காட்சியைக் காண்பவர்கள் இக்காட்சியிலேயே ஈடுபட்டு நிற்பர்.

இரதி மன்மதன் உருவங்கள் இணைப்பாக எழுதப்பட்டிருப்பதைக் காண்பர், கணவர்களுடன் சேர்ந்து செல்லும பெண்கள், அதைக்கண்டபோது, இவள்தான் ரதியா? இவன்தான் மன்மதனா? என்று கேட்பர். கணவன்மார்கள் ‘ஆம்’ என்று விடையளிப்பர்.

அகலிகையின் கதை எழுதப்பட்டிருக்கும் ஓவியத்தைக் காண்பர். இவன் இந்திரனாகிய பூனை; இவள் அகலிகை; இவன், அகலிகையின் கற்பைக்கெடுத்த இந்திரன்; வெளிவரும்போது அவனைக்கண்ட கவுதமன்; கவுதமன் சினத்தால் அகலிகை கல்லுருப்பெற்ற வடிவம் இது; இவ்வாறு அந்த ஓவியத்தைப் பார்த்து உரையாடுவார்கள்.

இவ்வாறு பலவகையான ஓவியங்கள் தீட்டப்பட்ட மண்டபத்தை அடைந்தவர்கள் அவைகளைக் குறித்துப் பல கேள்விகள் கேட்டனர்; அக்கேள்விகளுக்கு விடை தந்தனர்.

“என்றூழ் உறவரும் இருசுடர், நேமி
ஒன்றிய சுடர்நிலை உள்படுவோரும்;
இரதி, காமன், இவள், இவன் எனாஅ
விரகியர் வினவ, வினா இறுப்போரும்,
இந்திரன் பூசை, இவள் அகலிகை, இவன்
சென்ற கவுதமன், சினன்உறக் கல்உரு
ஒன்றியபடி இது என்று உரைசெய்வோரும்;
இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்
துன்னுநர் சுட்டவும், சுட்டு அறிவுறுத்தவும்.”

இவைகளே பரிபாடல் அடிகள்.

“ஓவத்து அன்ன வினைபுனை நல்இல்” சித்திரத்தைப் போன்ற வேலைப்பாடமைந்த நல்ல வீடு. (பதிற்று–பா. 61.)

“செம்பு இயன்றன்ன செய்வுறு நெடும்சுவர்
உருவப்பல்பூ ஒரு கொடி வளைஇ”.

“செம்பினால் செய்யப்பட்டது போன்ற உறுதியான பெரிய சுவரிலே சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்ற அழகிய பல மலர்கள் பூத்த கொடிகளும் எழுதப்பட்டிருக்கின்றன.”

(நெடுநல்வாடை–112–113.)

"திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக
விண்ஊர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய
உரோகிணி".

"புதிதாகச் செய்யப்பட்ட-மெழுகு பூசப்பட்ட-கட்டிலில் உள்ள மேற்கட்டியின் உட்புறத்திலே (அஸ்தமானகிரி) மேஷராசி முதலிய பன்னிரண்டு ராசிகளும் எழுதப்பட்டிருக்கின்றன. வானத்திலே விரைந்து சுற்றும் சூரியனுடன் மாறுபட்ட சந்திரனுடைய உருவமும் எழுதப்பட்டுள்ளது. சந்திரனும், உரோகிணி நட்சத்திரமும் பிரியாது நிற்கின்ற நிலையை ஓவியமாக்கப்பட்டிருக்கின்றது."

கணவனும், மனைவியும், சந்திரனும்—உரோகிணியும் போல் பிரியாமல் வாழக்கடமைப்பட்டவர்கள் என்பதை நினைப்பூட்டவே இவ்வாறு படுக்கும் கட்டிலின் மேற்கட்டியில் ஓவியம் வரைந்தனர்.

மேலே காட்டிய பரிபாடல், பதிற்றுப்பத்து, நெடுநல்வாடை அடிகள், பண்டைக்காலத் தமிழர்களின் ஓவிய அறிவைக் காட்டுகின்றன. ஓவியங்களை அவர்கள் பயன்படுத்திக்கொண்ட விதத்தையும் உணர்த்துகின்றன.

மருத்துவக்கலை :

பண்டைத் தமிழர்கள் மருத்துவக் கலையிலே சிறந்திருந்தனர். பழந்தமிழர்களின் மருத்துவக்கலையின் வளர்ச்சியே இன்று சித்த வைத்தியம் என்னும் பெயருடன் சிறந்து விளங்குகின்றது. சித்த வைத்திய முறை பழந்தமிழர்கள் கண்டறிந்த வைத்திய முறை என்பதில் ஐயம் இல்லை.

"அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாது,
மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன்".

"நீக்குதற்கரிய நோயைப் பெற்றவர்களுக்கு, அவர் தின்ன விரும்பியவைகளைக் கொடுக்காமல், அவர் நோய் தணிவதற்குரிய மருந்தை ஆராய்ந்து கொடுத்த அறநெறியை உடையவன்." (நற்றிணை-பா. 136)

இதில் மருத்துவனை அறவோன் என்று கூறுவது குறிப்பிடத் தக்கது. மக்கள் துன்பத்தை நீக்கிக் காப்போனாதலின் அறவோன் என்று புகழப்பட்டது. நோய் இன்னது; அதற்குக் கொடுக்க வேண்டிய மருந்து இன்னது; மருந்துண்ணும்போது சாப்பிடக் கூடிய பண்டங்கள் இவை. சாப்பிடக் கூடாத பண்டங்கள் இவை;

என்பவைகளை யெல்லாம் அறிந்தவன் சிறந்த மருத்துவன் என்ற கருத்தை இந்த நற்றிணை அடிகள் காட்டுகின்றன.

தமிழர்களின் மருத்துவக்கலைத் தேர்ச்சியின் சிறப்பைக் காணவேண்டுமானால் திருக்குறள் ஒன்றே போதுமானதாகும். மருந்து என்னும் அதிகாரத்தைப் படிப்போர் இவ்வுண்மையை உணரலாம்.

நோய்வராமல் காத்துக்கொள்ளும் வழி; நோய் வந்தபின் அந்த நோயை ஒழிக்க மருத்துவம் செய்யும் முறை; இவைகளைத் திருக்குறள் விளக்கமாகக் கூறுகின்றது. திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கும் வைத்தியமுறை இக்காலத்தில் மிகுந்த வளர்ச்சிபெற்றிருக்கும் விஞ்ஞான வைத்திய முறைக்கு ஒத்திருப்பதைக் காணலாம்.

மருந்து என்னும் அதிகாரத்தில் பத்துக் குறள்களில் ஏழு குறள்கள் உணவைப் பற்றியே கூறுகின்றன.

"உணவு மிகுந்தாலும் நோயுண்டாகும்; உணவு குறைந்தாலும் நோய் உண்டாகும்" என்பது முதற் குறள்.

"உண்ட உணவு செரித்தபின் அளவோடு உண்டால் நோய் அணுகாது" என்பது இரண்டாவது குறள்.

"உண்ட உணவு செரித்தபின் அளவோடு உண்பதுதான் நீண்டகாலம் வாழ்வதற்கு வழி" என்பது மூன்றாவது குறள்.

"குற்றமற்ற உணவை, நன்றாகப் பசி எடுத்தபின் உண்ணுக" என்பது நான்காவது குறள்.

"நல்ல உணவை அளவோடு உண்டால் உயிருக்கு ஆபத்து இல்லை" என்பது ஐந்தாவது குறள்.

"குறைவாக உண்பவன் இன்புறுவான், அளவுக்கு மீறி உண்பவன், பிணியால் துன்புறுவான்" என்பது ஆறாவது குறள்.

"பசியின் அளவு தெரியாமல், மிகுதியாக உண்பவன், அளவற்ற நோய்களுக்கு ஆளாவான்" என்பது ஏழாவது குறள்.

நோய் வருவதற்கும், நோய் வாராமைக்கும் காரணம் உணவுதான் என்பதை இக்கால மருத்துவர்களும் ஒப்புக்கொள்கின்றனர். உடல் நலத்துக்கேற்ற நல்ல உணவுகளை அளவோடு உண்பவர்கள் நீண்ட காலம் நோயின்றி வாழமுடியும் என்ற உண்மையைப் பண்டைத் தமிழர்கள் அறிந்திருந்தனர். இதற்கு இக் குறட்பாக்களே சான்றாகும்.

நோயாளிக்கு எப்படி மருத்துவம் செய்யவேண்டும் என்று கூறப்படும் குறள்கள் மிகச்சிறந்த கருத்துள்ளவை.

"முதலில் நோய் இன்னது என்று தெரிந்துகொள்ள வேண்டும்; அதன்பின் அந்த நோய் எப்படி வந்தது என்ற காரணத்தை அறியவேண்டும்; அதன்பின் அந்த நோயைத் தணிக்கும் வழியைக் காணவேண்டும். அதன்பின் அதற்குத் தகுந்த மருந்தைக் கொடுக்கவேண்டும்."

"நோய்நாடி நோய்முதல் நாடிஅது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

இத் திருக்குறளை மறவாமல் பின்பற்றும் வைத்தியர்கள், தங்கள் தொழிலிலே வெற்றிபெற முடியும்.

"நோயாளியின் நிலைமை, நோயின் நிலைமை, மருந்து கொடுப்பதற்கேற்ற காலம் இவற்றை ஆராய்ந்து மருத்துவம் செய்யவேண்டும். இதுவே வைத்தியன் கடமை" என்று ஒன்பதாவது குறள் கூறுகின்றது.

பத்தாவது குறள் மிகவும் குறிப்பிடத்தக்கது. வைத்தியம் செய்யும் முறையை நான்கு பகுதியாகப் பிரித்துக் கூறுகின்றது அக்குறள்.

"நோயாளி, மருத்துவன், மருந்து, நோயாளியின் பக்கத்திலிருந்து பார்த்துக்கொள்ளுகின்றவன் என்று நான்கு பகுதியையுடையது மருத்துவ முறை."

"உற்றவன், தீர்ப்பான், மருந்துஉழைச் செல்வான் என்று
அப்பால் நாற்கூற்றே மருந்து."

இதுவே திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரத்தில் உள்ள இறுதிக் குறள்.

நோயாளியின் நிலைமையை நன்றாகப் பரிசோதிக்க வேண்டும். ஒரே நோய், அவரவர்களின் உடல் நிலைக்கு ஏற்ற வாறு கடுமையாகவும் இருக்கும்; குறைவாகவும் இருக்கும். நோயாளியின் தாங்கும் சக்தியையும் அறிந்து அதற்கேற்றபடி மருத்துவம் செய்யவேண்டும்.

இரண்டாவது நோய் தீர்ப்பவனாகிய மருத்துவன் மருத்துவ முறைகளை நன்றாக அறிந்திருக்கவேண்டும். நோயாளிக்கு நம்பிக்கை உண்டாகும்படி நடந்துகொள்ள வேண்டும்.

மூன்றாவது, மருந்து. அது நோயைத் தீர்க்காவிட்டாலும் கெடுதி செய்யாமலிருக்க வேண்டும். ஒரே நோய்க்குப் பல

மருந்துகள் உண்டு. நோயாளியின் உடல்நிலைக்கேற்ற மருந்து இது என்று கண்டுபிடிக்கவேண்டும்.

நான்காவது நோயாளியின் பக்கத்திலிருந்து பார்ப்பவன் (நர்ஸ்) அவனும் நோயாளியின் நிலையை அறிந்து, அவன் வருந்தும்போது அவ்வருத்தத்தைத் தணிக்கும் தன்மையுள்ளவனாக இருக்கவேண்டும். நோயாளியின் பக்கத்திலிருப்பவனுக்கும் மருத்துவ நூல் அறிவும், நோயாளியைப் பாதுகாக்கும் பயிற்சியும் அமைந்திருக்க வேண்டும்.

மருத்துவத்தைப் பற்றி மேலே கூறப்பட்டிருக்கும் செய்திகளைக்கொண்டு, பண்டைத் தமிழரின் மருத்துவ அறிவைக் காணலாம். மக்களின் நல்வாழ்வுக்கு இன்றியமையாத மருத்துவக்கலையிலே பண்டைத் தமிழர் மிகவும் அக்கறை காட்டினர். அக்கலையை வளர்த்து வந்தனர். தமிழ்நாட்டில் மருத்துவக்கலை மிகவும் உயர்ந்த நிலையில் வளர்ந்திருந்தது. இது உண்மை. இவ்வுண்மையைப் பண்டைத் தமிழ் நூல்கள் உணர்த்துகின்றன.

வானநூல் அறிவு :

பண்டைத் தமிழர்கள் வானநூல் அறிவும் பெற்றிருந்தனர். வானத்தில் உள்ள கிரகங்களின் மாறுபாட்டால் நிகழும் இயற்கை வேறுபாடுகளை அறிந்திருந்தனர்.

கார்த்திகை விழாக்கொண்டாடும் வழக்கம் பண்டைத் தமிழர்களிடம் இருந்தது. சந்திரனும் கார்த்திகை நட்சத்திரமும் நெருங்கியிருக்கும் நாளைக் கார்த்திகை நாள் என்று கொண்டனர்.

> "குறுமுயல் மறுநிறம்கிளர மதிநிறைந்து
> அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்
> மறுகு விளக்கு உறுத்து, மாலைதூக்கிப்
> பழவிறல் மூதூர்ப் பலர் உடன் துவன்றிய
> விழவு."

"சிறிய முயலாகிய மறு, தன் மார்பிலே விளங்க, முழுமதியாகி, கார்த்திகை நட்சத்திரம் சந்திரனுடன் சேர்ந்திருக்கும் நாள் கார்த்திகை நாளாகும். இந்நாளின் நள்ளிரவில் வீதியிலே விளக்கேற்றி வைத்து மலர்மாலைகள் தொங்கவிடுவர். பலரும் கூடி விழாக்கொண்டாடுவார்கள். இது கார்த்திகை விழா."

(அகநானூறு—பா. 141.)

வெள்ளி என்னும் நட்சத்திரத்தைக்கொண்டு, மழை பெய்யும், பெய்யாது என்ற நிலையை அறிந்து வந்தனர். வெள்ளி நல்ல கிரகங்களுடன் சேரும்போது மழை பெய்யும் என்பது பண்டைத் தமிழர்கள் நம்பிக்கை.

"வறிது வடக்கு இறைஞ்சிய சீர்சால் வெள்ளி
பயங்கெழு பொழுதோடு ஆநியம் நிற்ப."

"சிறிது வடக்கே சாய்ந்த சிறப்பு மிகுந்த வெள்ளியானது, மழைக்குப் பயன்படும் மற்றைய கிரகங்களுடன் சேர்ந்துநிற்கும் நாளில்." (பதிற்றுப்பத்து 24.)

"நிலம்பயம் பொழியச் சுடர்சினம் தணியப்
பயங்கெழு வெள்ளி ஆநியம் நிற்ப."

"நிலம் மிகுந்த பயனைத் தரும்படியும், சூரிய வெப்பம் தணியும்படியும், மழையை மிகுதியாகத் தரும் வெள்ளியானது, மற்றைக் கிரகங்களுடன் சேர்ந்து நிற்கும் நாளில்." (ஷை 69.)

பதிற்றுப்பத்தில் காணும் இவ்வடிகள், தமிழர்களின் வான நூல் அறிவைக் காட்டுகின்றன. புறநானூற்றின் 229வது பாடலில் வானநூல் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

மேஷ ராசியை ஆடு என்று கூறப்படுகிறது. கார்த்திகையை அழல் (நெருப்பு) என்று சொல்லப்படுகிறது. கார்த்திகையின் அதிதேவதை அக்கினியாகும். அனுட நட்சத்திரம் முடப்பனை போன்ற தோற்றமுடையது. புனர்பூச நட்சத்திரம் குளம் போன்ற உருவமுடையது; இதனால் புனர்பூசத்தை, கயம், குளம், ஏரி என்னும் பெயரிட்டு அழைப்பர்.

இப் புறநானூற்றுப் பாடலில், கார்த்திகை, அனுஷம், புனர்பூசம், உத்திரம், மூலம், மிருகசீரிடம் ஆகிய நட்சத்திரங்கள் காணப்படுகின்றன.

நல்லநாள் கெட்டநாள் பார்க்கும் வழக்கம் பண்டைத் தமிழர்களிடம் இருந்தது. வானத்து நட்சத்திரங்களையும், கிரகங்களையும் கொண்டே நல்லநாள், கெட்டநாள்களைக் கண்டறிந்தனர்.

நல்லநாளிலே திருமணம் செய்யும் வழக்கம் பண்டைத் தமிழர்களிடம் இருந்தது.

"புள்ளுப்புணர்ந்து இனிய வாகத்தெள் ஒளி
அங்கண் இருவிசும்பு விளங்கத், திங்கள்
சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுள் பேணிப்
படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ
வதுவை மண்ணிய மகளிர்."

"பறவைச் சகுனம் நன்மையாகக் காணும்படியும், தெளிவான வானநிலவொளி பெரிய வானத்தில் விளங்கும்படி, சந்திரனை உரோகிணி நட்சத்திரம் சேர்ந்திருக்கும் குற்றமற்ற நல்லநாளிலே, கல்யாண வீட்டை அலங்கரித்து, கடவுளை

வணங்கி, மணத்தில் அடிக்கப்படும் முழவுடன், பெரிய முரச வாத்தியமும் ஒலிக்கும்படி, தலைவியை மங்கல நீராட்டிய மகளிர்."
(அகநானூறு—பா. 136.)

"வான்ஊர் மதியம்சகடு அணைய, வானத்துச்
சாலிஒரு மீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்கண் நோன்புஎன்னை."

"சந்திரனை உரோகிணி சேரும் நன்னாளிலே, அருந்ததி போன்ற கண்ணகியை, வயதேறிய அந்தணன் வேதநெறிச் சடங்குகளைச் செய்து காட்ட, கோவலன் கண்ணகியுடன் தீயை வலம்செய்கின்ற காட்சியைக்காண்பவர்கள் கண்கள் செய்த தவம் யாதோ." (சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்து—50 - 53.)

சந்திரனை உரோகிணி நட்சத்திரம் சேரும் நாளை நல்ல நாளாகக்கொண்டனர் தமிழர்; அந்த நாளைத் திருமணம் செய்வதற்கேற்ற சிறந்த நாளாகக்கொண்டனர். இவ்வுண்மையை மேலே காட்டிய அகநானூற்று அடிகளும், சிலப்பதிகார அடிகளும் காட்டின. இவைகளும் பண்டைத் தமிழர்களின் வான நூல் அறிவுக்குச் சான்றாகும்.

இவ்வாறு வான நூற்குறிப்புக்கள் பல, சங்க இலக்கியங்களிலே காணப்படுகின்றன. இக் குறிப்புக்களால், தமிழர்களின் வான நூல் கலை அறிவைக் காணலாம்.

மேலே கூறியவைகளைக்கொண்டு பண்டைத் தமிழர்கள், மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் சிறந்த கலைகள் பலவற்றையும் அறிந்திருந்தனர் என்பதைக் காணலாம்.

சிறப்பாகப் பண்டைத் தமிழர்கள் கட்டிடக் கலையிலே தேர்ச்சி பெற்றிருந்தனர். சிற்பக்கலையிலே சிறந்து விளங்கினர். உலோகங்களால் நுண்ணிய வேலைப்பாடமைந்த பண்டங்கள் பலவற்றைச் செய்துவந்தனர்.

நெசவுக் கலையிலே அவர்கள் நிகர்அற்று விளங்கினர். நடனம், இசை போன்ற அருங்கலைகளிலே ஆற்றல் பெற்றிருந்தனர். போட்டிபோட்டுக் கலைகள் பலவற்றை வளர்த்துவந்தனர்.

ஓவியக்கலையை மக்களுக்கு அறிவூட்டப் பயன்படுத்திவந்தனர். மருத்துவக் கலையிலே நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர். வான நூல் கலையிலும் சிறந்து விளங்கினர். இவ்வுண்மைகளையெல்லாம் பண்டைத் தமிழ் நூல்கள் நமக்குக் கூறுகின்றன.